
# 30

## அல்-அஷரதுல் முபஷ்ஷரூன்




உலகில் வாழ்ந்த மனிதர்களில் நபிமார்களும் ரஸூல்மார்களும் உயர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்கள் பாவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்கள். இவர்கள் சுவர்க்கவாசிகளாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் தவிர்ந்த, நபி r அவர்களின் ஸஹாபாக்களில் சிலரும் சுவர்க்கவாசிகள் என்று நபி r அவர்களால் இவ்வுலகிலேயே நன்மாராயம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் 10 பேர். இவர்களை அரபியில் அல்-அஷரதுல் முபஷ்ஷரூன் என்று அழைப்போம்.

இவர்களில் அபூபக்ர் (ரழி), உமர் (ரழி) ஆகியவர்களைப் பற்றி 7 ஆம் வகுப்பில் அறிந்து கொண்டோம். உஸ்மான் (ரழி), அலி (ரழி) ஆகிய இருவர்களையும் பற்றி முன்னைய பாடங்களில் விளக்கமாகக் கற்றுக் கொண்டோம். ஏனையவர்களின் வாழ்க்கையைப் பற்றி சுருக்கமாகப் பார்ப்போம்.

## ஸஃத் இப்னு அபீ வக்காஸ் (ரழி)

இவரது தந்தை மாலிக் என்பவராகும். இவர் அபீ வக்காஸ் என்றும் அழைக்கப் படுகின்றார். இவர் குறைஷிக் கோத்திரத்தை சார்ந்தவர். ஸ'.த் (ரழி) அவர்கள் தனது 17ஆம் வயதில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். ஆரம்பத்திலேயே இஸ்லாத்தை ஏற்றவர்களுள் இவரும் ஒருவர்.

இஸ்லாத்தை ஏற்றதன் பின்னர் ஏனையோர் எதிர்நோக்கிய பிரச்சினைகளை இவரும் எதிர்நோக்கினார். இஸ்லாத்தை விட்டுவிடும்படி இவரது தாய் பல வழிகளிலும் கூறினார். இவர் இஸ்லாத்தை ஏற்றதற்காக, இவரது தாய் உண்ணாமலும் பருகாமலும் பட்டினியில் இருந்து மரணத்தை நெருங்கியபோதும் இவர் இஸ்லாத்தை விட்டுவிடவில்லை. தாயை விட தான் ஏற்றிருக்கும் இஸ்லாம் மேலானது எனக் கருதினார்கள்.

இவர் வீரம் மிக்கவராகவும், அறிவு ஆற்றல் மிக்கவராகவும் காணப்பட்டார். ஹிஜ்ரத்தின் பின்னர் இஸ்லாத்திற்காக பல போர்களிலும் பங்குபற்றியுள்ளார். உமர் (ரழி) அவர்களின் காலத்தில் பாரசீகத்திற்கு எதிரான யுத்தத்தில் தளபதியாக நியமிக்கப்பட்டார். காதிஸிய்யா யுத்தத்தில் இவர்களின் படையை விட மும்மடங்கு பலம் கொண்ட பயிற்றப்பட்ட ஆயுத படையை துணிச்சலுடன் எதிர்கொண்டு வெற்றி கொண்டார். ஈராக்கில் கூபா நகர கவர்னராகவும் செயல்பட்டார். உமர் (ரழி) தனக்குப் பின்னர் கலீபாவாக வரத் தகுதியான ஆறு ஸஹாபாக்களை குறிப்பிட்டி ருந்தார். அவர்களில் இவரும் ஒருவராவார்.

இவர் சிறந்த கொடை வள்ளலாகத் திகழ்ந்தார். ஒருமுறை 'ஹஜ்ஜதுல் வதா'வின்போது நபி ﷺ அவர்களிடம் சென்று, 'அல்லாஹ்வின் தூதரே என்னிடம் அதிக செல்வம் உண்டு. ஒரு மகளைத் தவிர வாரிசுகளுமில்லை. எனது சொத்தில் மூன்றில் இரண்டு பங்கினை ஸதகாவாகக் கொடுக்கட்டுமா' என்று கேட்டார்கள். அதற்கு நபி ﷺ அவர்கள் வேண்டாம் என்றார்கள். பின்னர் இரண்டில் ஒரு பங்கினை ஸதகாவாகக் கொடுக்கட்டுமா என்று கேட்க, வேண்டாம் என்றார்கள். மூன்றில் ஒரு பங்கினை ஸதகாவாகக் கொடுக்கட்டுமா என்று மீண்டும் கேட்க, அதுவும் அதிகமே. உனது வாரிசுகளை மற்றவர்களிடம் கையேந்துபவர்களாக விட்டுச் செல்வதை விடப் பணக்காரர்களாக விட்டுச் செல்வது மேலானது" என்றார்கள்.

இவர்களிடம் அம்பு, துஆ என்ற இரண்டு விசேட ஆயுதங்கள் இருந்தன. இவர் யுத்தத்தில் குறிபார்த்து அம்பினை எய்தால் அது எதிரியைத் தாக்காது விடுவதில்லை. இவர் அல்லாஹ்விடம் கேட்கும் துஆக்களும் ஏற்றுக்கொள்ளப் படாமல் இருந்ததில்லை.

இவர் அல்லாஹ்வுக்குப் பயந்து அதிகமாகக் கண்ணீர் வடிப்பார்கள். ஒருமுறை நபி r அவர்கள் ஸஹாபாக்களுடன் அமர்ந்து கொண்டிருக்கும்போது தற்போது சுவர்க்கவாசிகளில் ஒருவர் வரப் போகின்றார் என்று ஸஹாபாக்களை நோக்கிக் கூறினார்கள். ஸஹாபாக்கள் திரும்பிப் பார்த்தபோது ஸஃத் இப்னு அபீ வக்காஸ் (ரழி) அவர்கள் அங்கு வந்தார்கள்.

உஸ்மான் (ரழி) அவர்களின் கொலைக்குப் பின்னர் மதீனாவிலிருந்து தூரமாகி வாழ்ந்த இவர், ஹிஜ்ரி 54ல் தனது 80ஆவது வயதில் மரணித்தார்கள்.

## அபூ உபைதா இப்னு அல் ஜர்ராஹ் (ரழி)

ஆரம்ப கட்டத்தில் இஸ்லாத்தை ஏற்றவர்களில் இவரும் ஒருவர். இவரது பெயர் ஆமிர். தந்தையின் பெயர் அப்துல்லாஹ். எனினும் இவரது செல்லப் பெயரையும் பாட்டனாரின் பெயரையும் இணைத்து அழைக்கப்பட்டார். இதனால் அபூ உபைதா இப்னு அல் ஜர்ராஹ் என்று பிரசித்தமானார்கள்.

இவர் இஸ்லாத்தை ஏற்றது முதல் இஸ்லாத்திற்காக எதனையும் தியாகம் செய்வதற்கு தயாராக இருந்தார். ஹபஷா, மதீனா ஆகிய இரு ஹிஜ்ரத்களிலும் பங்கு பற்றியுள்ளார். இஸ்லாத்திற்காக மேற்கொள்ளப்பட்ட எல்லா யுத்தங்களிலும் பங்கு கொண்டார். நபி r அவர்களின் வபாத்திற்குப் பின்னர் அபூபக்ர் (ரழி), உமர் (ரழி) ஆகியவர்களின் காலப் பகுதிகளில் இடம்பெற்ற யுத்தங்களிலும் பங்கு கொண்டார்.

நபி r அவர்கள் அபூ உபைதா (ரழி) அவர்களை அதிகமாக நேசித்தார்கள். 'சமூகத்தில் நம்பிக்கை மிக்கவர்' என்று பெயர் பெற்றார். நஜ்ரான் பிரதேசத்திலிருந்து இஸ்லாத்தை ஏற்ற ஒரு குழு நபி r அவர்களை சந்திக்க வந்தது. அவர்கள் தமக்குக் குர்ஆனையும், ஸுன்னாவையும் கற்பிக்க ஒருவரை அனுப்பும்படி கேட்டனர். நிச்சயமாக நம்பிக்கையான ஒருவரையே உங்களுடன் அனுப்புவேன் என்று கூறிய நபி r அவர்கள், அபூ உபைதா (ரழி) அவர்களை அவர்களுடன் செல்லுமாறு பணித்தார்கள்.

கலீபா உமர் (ரழி) அவர்கள் இவரை ஷாம் தேசத்திற்குத் தளபதியாக அனுப்பினார்கள். கலீபா அவர்கள் ஷாம் தேசத்திற்குச் சென்றபோது அபூ உபைதா (ரழி) அவர்கள் தங்கியிருந்த வீட்டுக்குச் சென்றார்கள். அங்கே அவரது வாளையும், கேடயத்தையும் தவிர வேறு எந்தப் பொருளையோ, தளபாடங்களையோ காணவில்லை. இதனை அவதானித்த கலீபா அவர்கள், உங்கள் பாவனைக்கு ஏதேனும் எடுத்துக் கொள்ளக் கூடாதா? என்று கேட்க, 'அமீருல் முஃமினீன் அவர்களே, இது எனது கப்ருக்குப் போதுமானது' என்று பதிலளித்தார்கள். இவ்வாறு மிகவும் எளிமையாக வாழ்க்கையை நடாத்தினார்கள். ஒருமுறை பைத்துல் முகத்தஸில் தொழுவதற்கு ஆசைப்பட்டு புறப்பட்டார்கள். அவ்வேளை அங்கு பரவியிருந்த தொற்று நோயினால் பீடிக்கப்பட்டு, ஹிஜ்ரி 18இல் 58ஆம் வயதில் மரணித்தார்கள்.

## தல்ஹா இப்னு உபைதுல்லாஹ் (ரழி)

ஒருமுறை தல்ஹா (ரழி) வியாபார நோக்கமாக மக்காவிற்கு வெளியே சென்றிருந்தார். அங்கு அவர் ஒரு பாதிரியை சந்தித்தார். அண்மையில் ஒரு நபி வரப்போவதாகவும் அவரிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுமாறும் அவர் தல்ஹா (ரழி) அவர்களை எச்சரித்தார். அவர் மக்காவுக்குத் திரும்பியபோது நபி r அவர்களின் நபித்துவ செய்தியை பற்றி மக்கள் கதைப்பதைக் கேட்டார். தனது நண்பர் அபூபக்ர் (ரழி) அவர்களைச் சந்திக்கச் சென்றார். அவர்களுடன் உரையாடிய பின்னர் நபி r அவர்களைச் சந்திக்க ஆசைப்பட்டார். அபூபக்ர் (ரழி) அவர்களுடன் நபி r அவர்களைச் சந்தித்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

இவர் குறைஷிக் கோத்திரத்தைச் சார்ந்தவர். உபைதுல்லாஹ் என்பவரின் மகனாவார். இவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டபோது நவ்பல் பின் ஹுவைலித் என்பவரால் துன்புறுத்தப்பட்டார். மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்தவர்களில் இவரும் ஒருவர்.

பத்ர் யுத்தத்தின்போது சில வேலைகளுக்காக இவரையும் ஸஈத் இப்னு ஸைத் (ரழி) அவர்களையும் நபி r அவர்கள் மதீனாவுக்கு வெளியே அனுப்பினார்கள். இதனால் இவர்களுக்கு யுத்தத்தில் பங்கு கொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இதன் காரணமாக மனம் வருந்துவதை கண்ட நபி r அவர்கள், ஏனைய போராளிகள்போல் இவருக்கும் நன்மையுண்டு என்று கூறி ஆறுதல் படுத்தினார்கள். உஹத் யுத்தத்தின்போது நபி r அவர்களை பாதுகாப்பதற்காக, தனது இடது கையால் நபி r அவர்களை அணைத்துக் கொண்டு வலது கையால் சூழ்ந்து நின்று எதிரிகளைத் தாக்கினார்கள்.

இவர் ஒரு வியாபாரியாகவும் செல்வந்தராகவும் இருந்தார். இஸ்லாத்திற்காக தனது செல்வத்தை செலவு செய்தார். பெரும் கொடை வள்ளலாகவும் இருந்தார். நபி r அவர்கள் இவர்களை ''கொடை வள்ளல் தல்ஹா'' என்று அழைத்தார்கள். ஒரு முறை தனது காணியை அதிக விலைக்கு விற்று கிடைத்த பணத்தை மதீனாவின் வீதிகளுக்கும் வீடுகளுக்கும் எடுத்துச் சென்று ஒரு திர்ஹம் கூட மீதியாகாமல் பங்கு வைத்தார்கள்.

இவர் உமர் (ரழி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் மஜ்லிஸுஷ் ஷூராவில் அங்கத்தவராகவும் இருந்தார். ஜமல் யுத்தத்தின்போது ஆயிஷா (ரழி) அவர்களின் படையுடன் இணைந்து யுத்தம் செய்ய வந்தார். பின்னர் வாபஸ் பெற்றுக்கொண்டார். ஹிஜ்ரி 36இல் எதிரி ஒருவரின் அம்புக்கு இரையாகி மரணித்தார்.

## ஸுபைர் இப்னுல் அவ்வாம் (ரழி)

இவர் குறைஷிக் கோத்திரத்தைச் சார்ந்தவர். இவரது தந்தையின் பெயர் அவ்வாம். இவர் நபி (ஸல்) அவர்களின் நெருங்கிய உறவினர்களில் ஒருவர். இஸ்லாத்தை ஏற்றவர்களில் 7ஆவது நபர் ஆவார். இஸ்லாத்தை ஏற்கும்போது இவரது வயது 15

ஆகும். இவர் இஸ்லாத்தை ஏற்றதற்காக பாயினால் சுற்றப்பட்டு மூச்சுத் திணறும் வகையில் புகையூட்டப்பட்டார்.

இவர் இரு ஹிஜ்ரத்களிலும் பங்கு கொண்டார். இஸ்லாமிய வரலாற்றில் பிரசித்தி பெற்ற வீரர்களில் இவரும் ஒருவர். ஹிஜ்ரத்தின் பின் இடம்பெற்ற அனைத்து யுத்தங்களிலும் இவர் பங்கு கொண்டார். எதற்கும் அஞ்சாது யுத்தத்தில் முன்னணியில் நின்று போரிட்டார். இவரது உடம்பில் காணப்பட்ட வெட்டுக் காயங்கள் அவரது வீரத்தை எடுத்துக் காட்டின.

இவர் வியாபாரியாக இருந்தார். தனது வருமானத்தை இஸ்லாத்திற்காக அதிகமாக செலவு செய்தார். மரணிக்கும்போது அவருக்கு இருந்த கடனை திருப்பிக் கொடுக்கும்படி அவரது மகன் அப்துல்லாஹ்வுக்கு வஸிய்யத் செய்தார். இவரைப் பற்றி நபி r அவர்கள் பின்வருமாறு கூறினார்கள். ''எல்லா நபிமார்களுக்கும் ஹவாரிய்யீன்கள் உள்ளனர். எனது ஹவாரி ஸுபைர் ஆவார்''.

இவர் உமர் (ரழி) அவர்களால் கலீபாவாகத் தெரிவுசெய்யப்படுவதற்குத் தகுதி எனக் கண்ட ஆறு பேர்களில் ஒருவராவார். அலி (ரழி) அவர்களின் காலத்தில் ஜமல் யுத்தத்தின்போது ஆயிஷா (ரழி) அவர்களின் அணியில் நின்று போராட முன்வந்தார். பின்னர் வாபஸ் பெற்று திரும்பும் வழியில் ஹிஜ்ரி 36 இல் அம்ர் இப்னு ஜர்மூஸ் என்பவரால் கொலை செய்யப்பட்டார்.

## அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப் (ரழி)

இவர் குறைஷிக் கோத்திரத்தைச் சேர்ந்த அவ்ப் என்பவரின் மகன். இஸ்லாத்தை ஆரம்பத்தில் ஏற்றுக் கொண்ட எட்டு பேர்களில் இவரும் ஒருவர். இவர் அபூ முஹம்மத் என்றும் அழைக்கப்பட்டார். இஸ்லாத்தை ஏற்றது முதல் சுவர்க்கவாசிகளில் ஒருவர் என்று நபி r அவர்களால் நன்மாராயம் கூறப்படும் அளவுக்கு இஸ்லாத்திற்காக சேவை செய்துள்ளார். இஸ்லாத்தை ஏற்றதற்காக ஏனையோர்கள் போன்று இவரும் துன்புறுத்தப்பட்டார்.

இவர் ஒரு வியாபாரியாகவும், செல்வந்தராகவும் இருந்தார். பெரும் கொடை வள்ளலாகவும் காணப்பட்டார். ஒரு முறை மதீனா நகரத்திலே, 700 ஒட்டகங்களில் கொண்டுவரப்பட்ட பொருட்களை ஏழைகளுக்கு பகிர்ந்தளித்தார். இதனை கண்ட ஆயிஷா (ரழி) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: ஒரு முறை நபி r அவர்கள் ''அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப் சுவர்க்கத்தினுள் நுழைவதை நான் கண்டேன்'' என்று கூறுவதைக் கேட்டேன்.

நபி r அவர்கள் ஹிஜ்ரத் செல்லுமாறு கூறியதை ஏற்று இவர் இரு ஹிஜ்ரத்களிலும் பங்கு கொண்டார். நேர்மையானவராகவும், விசுவாசமானவராகவும் வாழ்ந்தார். இஸ்லாத்தை ஏற்றதன் பின்னர் இவரது வியாபாரம் மிகச் செழிப்பாக அமைந்தது. எனினும் செல்வம் சேர்க்கும் ஆசை இவரிடம் இருக்கவில்லை. ஒருமுறை அவருக்குச்

சொந்தமான ஒரு நிலத்தை 40,000 திர்ஹம்களுக்கு விற்பனை செய்தார். அதனால் கிடைத்த பணத்தை அவருடைய உறவினர்களுக்கும் உம்மஹாத்துல் மு.ஃமினீன் களுக்கும், ஏழைகளுக்கும் பகிர்ந்து கொடுத்தார்.

ஹிஜ்ரத்தின் பின்னர் நிகழ்ந்த யுத்தங்களில் பங்கு கொண்டார்கள். உஹத் யுத்தத்தில் இவருக்கு 20க்கு மேற்பட்ட காயங்கள் ஏற்பட்டன. சில பற்களும் உடைந்தன. உமர் (ரழி) அவர்களினால் நியமிக்கப்பட்ட மஜ்லிஸுஷ் ஷூரா அங்கத்தவர்களில் இவரும் ஒருவர். இவர் தனது 55ஆவது வயதில் ஹிஜ்ரி 32 இல் மரணித்தார்.

## ஸஈத் இப்னு ஸைத் (ரழி)

இவரது தந்தையின் பெயர் ஸைத். விவசாயம் செய்து வாழ்ந்து வந்தார். உமர் (ரழி) அவர்களின் சகோதரி பாத்திமாவை விவாகம் செய்தார். ஆரம்ப கட்டத்திலேயே தனது மனைவியுடன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றதன் பின்னர் பல யுத்தங்களில் பங்கு கொண்டார்கள். நபி ﷺ அவர்கள் உஹத் யுத்தத்தின்போது சில பணிகளுக்காக இவரை மதீனாவுக்கு வெளியே அனுப்பினார்கள். இதனால் உஹத் யுத்தத்தில் பங்குபற்ற முடியவில்லை. ஹிஜ்ரி 51இல் இவர் மரணமானார்.

இவ்வாறு, மேற்குறிப்பிட்ட ஸஹாபாக்கள் அனைவரும் இஸ்லாத்திற்காக பெரும் தியாகங்களைச் செய்துள்ளார்கள். ஏனையோருக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினார்கள். இதன் பயனாக இவர்கள் உலகில் வாழ்கின்றபோதே ‘சுவர்க்கவாசிகள்’ என்ற நன்மாராயத்தைப் பெற்றுக் கொண்ட பாக்கியவான்களாக மாறினர்.

**பயிற்சி:**

1. அல்-அஷரதுல் முபஷ்ஷரூன் என்ற அரபிப் பதத்தின் பொருள் என்ன?
2. அல்-அஷரதுல் முபஷ்ஷரூனில் அடங்கும் ஸஹாபாக்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
3. அல்-அஷரதுல் முபஷ்ஷரூனில் அடங்கும் ஸஹாபாக்கள் மூவரின் தியாகங்களை விளக்குக.